# தினசரி சந்தை நிலவரத்தின் மூலம் குறிப்பிடத்தக்க மாற்றம்



திரு.அழகர்சாமி
டி.எம்.ஜி காய்கனி வியாபாரி கடை எண்:159
ஹட், வி.வி.ஏ, பாதாளப்பள்ளி
ஒசூர் - 635109

என் பெயர் திரு.அழகர்சாமி நான் ஒசூர் சந்தையில் காய்கனி கடை வைத்துள்ளேன். எனக்கு 21 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் தக்காளி மற்றும் குடமிளகாய் பயிர்செய்து வருகிறேன். நான் எனது விளைபொருள்களை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்து வருகிறேன். ஆனாலும் என்னால் உற்பத்தி செலவுகளை விடவும் வருமானம் குறைவாகவே இருந்தது. அதனால் நான் எனது பொருள்களை சென்னை மற்றும் கோயமுத்தூர் சந்தைகளில் விற்க திட்டமிட்டேன். அப்பொழுது நான் அறிந்து கொண்டு எனது அலைபேசி எண்னை அதில் பதிவு செய்து கொண்டேன்.

இந்த திட்டத்தின் மூலமாக சென்னை மற்றும் கோயமுத்தூர் சந்தைகளின் விலை நிலவரங்கள் குறுந்தகவல்களாக கிடைப்பதால் என்னால் தினசரி விலை நிலவரங்களை தெரிந்து கொள்ள முடிகிறது. தினசரி சந்தை நிலவர இணைய தளத்தின் மூலமாக மொத்த வியாபாரிகளின் விபரங்களை தெரிந்து கொண்டு எனது விளைபொருள்களை அனுப்பி வருகிறேன். இப்பொழுது எனது வருமானம் மற்றும் விவசாயம் இரண்டும் மேம்பட்டுள்ளது மேலும் நிறைய நன்மைகளை அடைந்துள்ளேன்.

விற்பனை

நான் எனது பொருள்களை உள்ளூர் சந்தையில் விற்று வருகிறேன். ஆனால் என்னால் உற்பத்தி செலவுகளை கூட பெற முடியவில்லை. அதனால் எனது பொருள்களை சென்னை மற்றும் கோயமுத்தூர் சந்தைகளில் விற்க திட்டமிட்டேன். இப்பொழுது எனக்கு நல்ல லாபம் கிடைத்து வருகிறது.

**வரும் காலங்களில்**

- காய்கனிகளுக்கு ஒப்பந்த முறை விவசாயம்
- தனிநபர்களின் கணக்கில் பணத்தை செலுத்திவிடுதல்
- வேறு மாநில சந்தைகளையும் அறிமுகப்படுத்துதல் இந்த சேவைகள் எங்களில் சமூக நிலையை உயர்த்த உதவும்.

தினசரி சந்தை நிலவரம் மற்றும் துல்லிய பண்ணைய திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளுக்கு எங்களின் மனமார்ந்த நன்றி.